RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 129 | மே.16 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மே மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 வரவு வைப்பு; தவெக அரசு நடவடிக்கை

சென்னை, மே.16-

கடந்த 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்ற திமுக மகளிருக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்தது. அதன்படி, ஆட்சிக்கு வந்த 2 ஆண்டுகளுக்குப்பின் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் தேதி முதல் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை அரசு அமல்படுத்தியது. அதன்படி, 1 கோடியே 31 லட்சம் பெண்கள் பயனாளிகளாக கண்டறியப்பட்டு மாதம் தோறும் 15ம் தேதி அவர்களில் வங்கி கணக்குகளில் தலா ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டு வருகிறது.


இந்நிலையில், சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது. புதிய அரசு ஆட்சியமைத்துள்ள நிலையில் வழக்கம்போல் பயனாளர்களுக்கு மே மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1 கோடியே 31 லட்சம் பெண் பயனாளர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 இன்று காலை வரவு வைக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைத்தொகை வரவு வைக்கப்படும் என்று முதல் அமைச்சர் விஜய் நேற்று கூறியிருந்த நிலையில் மே மாதத்திற்கான உரிமைத்தொகை இன்று வரவு வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கான புதுமை பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000 உதவித்தொகை மாணவமாணவியரின் வங்கி கணக்கில் தவெக அரசால் நேற்று வரவு வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.









## தமிழக அரசு அலுவலகங்களில் முதல்வர் விஜய் புகைப்படம் கட்டாயம்!

### வெளியான உத்தரவு

சென்னை: மே.16-

அரசு அலுவலகங்கள், அரசுத்துறை சார்ந்த கட்டிடங்கள் அனைத்திலும் முதல்வர் விஜய் புகைப்படத்தை வைப்பது கட்டாயம் என தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், ''முதல்வர் விஜய்யின் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படம் அனைத்து அரசு அலுவலகங்கள், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், தமிழ்நாடு அரசின் தன்னாட்சி அமைப்புகள், ஏனைய அரசு கட்டடங்களில் உரிய முறையில் காட்சிப்படுத்த வேண்டும்'' இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் எந்த மாதிரியான புகைப்படத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவதற்காக, முதல்வரின் 'அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ புகைப்படம்' தற்போது செய்தித்துறையால வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படம் அனைத்துத் துறைகளுக்கும் உரிய முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "முகத்தை மூடிக்கொண்டு வந்த நபர் யாரென்று தெளிவுபடுத்துக"

### விஜய்க்கு பிரேமலதா வலியுறுத்தல்

சென்னை: மே.16-

முகத்தை மூடிக்கொண்டு தனது வீட்டுக்கு வந்ததவர் யார்? என்பதை முதல்வர் விஜய் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''தமிழக அரசில் எந்தவித குதிரை பேர அரசியலும் இல்லை என்பதை முதல்வர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும்.

மதச்சார்பற்ற வெற்றி கூட்டணியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு நிபந்தனை இல்லாத ஆதரவு' என்று வெளிப்படையாக தெரிவித்தார்களோ, அதேபோல் அதிமுகவில் இருந்து பிரிந்து வந்தவர்களும் தங்களின் ஆதரவை எந்த நிபந்தனையும் இல்லாமல் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அப்போது தான் குதிரை பேரம் நடைபெறவில்லை என்பதை மக்கள் நம்புவார்கள்.





மேலும், 'முகத்தை மூடிக்கொண்டு வந்தவர் யார்?' என்பதையும் மக்களுக்கு தெரியப்படுத்துவதோடு, அதற்கு பின்பு எந்தவிதமான குதிரை பேரமும் நடக்கவில்லை என்பதையும் மக்களுக்கு வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று தேமுதிக சார்பாக கேட்டுக்கொள்கிறேன்'' இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கடந்த 13ம் தேதி தமிழக அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது நம்பிக்கை தீர்மானத்தின் மீது பேசிய தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா எம்எல்ஏ, தவெக அரசு மூடநம்பிக்கையை ஊக்குவிக்கும் வகையில், முதல்வரின் ஜோதிடருக்கு அரசுப் பதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் அரசு இளைஞர்களுக்கு தவறான முன்னுதாரணத்தை வைக்கிறது என்றும் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் பேசியிருந்தார். அன்றைய தினமே ரிக்கி ராதன் பண்டிட் நியமனத்தை அரசு ரத்து செய்தது என்பது நினைவுகூரத்தக்கது.

இந்நிலையில், விஜய் பெரும்பான்மைக்காக அரசியல் கட்சிகளை நாடிக்கொண்டிருந்த போது அவரது வீட்டுக்கு முகத்தை மூடிக் கொண்டு வந்த நபர் யார் என்று பிரேமலதா வினவியுள்ளார்.

# பிளஸ் 2 மார்க் அடிப்படையில் மருத்துவ இடங்களை நிரப்ப அவசரச் சட்டம் இயற்றுக: பிரதமருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை: மே.16-

2026-27 கல்வியாண்டுக்கான நீட் தேர்வினை ரத்து செய்து, 12ம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை மாநில அரசுகளே நிரப்பிக் கொள்ள அவசரச் சட்டம் இயற்ற வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

ஸ்டாலின் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில், ''நீட் தேர்வில் உள்ள அமைப்புரீதியான குறைபாடுகள் மீண்டும் ஒருமுறை வெளிச்சத்துக்கு வந்துள்ளன. வினாத்தாள் கசிவினைத் தொடர்ந்து, 2026ம் ஆண்டுக்கான நீட் தேர்வு இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், மிகுந்த கவலையோடு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

முறைகேடுகளில் ஈடுபட்டதாக, பல மாநிலங்களைச் சேர்ந்த 45 பேர் இதுவரை பிடிபட்டுள்ளனர். சிபிஐ விசாரணை நடக்கிறது. 22.8 லட்சம் மாணவர்கள் அடுத்து என்ன ஆகும் எனத் தெரியாமல் தவிக்கின்றனர்.

இப்படி நடப்பது முதல்முறையல்ல, 2015ஆம் ஆண்டு, நீட் அறிமுகமாவதற்கு முன் நடத்தப்பட்டு வந்த கிமிறிவிஜி தேர்வில் புளூடுத் சாதனங்கள் மூலம் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் நடைபெற்றன. உச்சநீதிமன்றம் தேர்வினை ரத்து செய்து, மறுதேர்வு நடத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டு நீட் தேர்வின் இரண்டாம் கட்டத்திலும் வினாத்தாள் கசிவு புகார்கள் எழுந்தன. ஆனால் அப்போது மறுதேர்வு நடத்தப்படவில்லை.

2017 ஆம் ஆண்டில் ஆள்மாறாட்டப் புகார்கள் எழுந்தன. ஆடைக் கட்டுப்பாடுகள் மூலம் பாகுபாடு காட்டப்பட்டது, மொழிபெயர்ப்புகள் தவறாக இருந்தன. இதனால் தேர்வில் சமவாய்ப்பு கேள்விக்குறியானது.

2020, 2021 ஆம் ஆண்டுகளில் மாணவர்களுக்கு பதிலாகப் போலித் தேர்வர்கள் தேர்வெழுதினர். இதன் பின்னணியில் பெரும் படையே இருந்து செயல்பட்டது.

2021ஆம் ஆண்டு முதுநிலை நீட் தேர்வு கவுன்சிலிங்கில் 6 மாதம் தாமதம் ஏற்பட்டு பலரது எதிர்காலம் பாதிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டிலும் திட்டமிட்ட ஆள்மாறாட்ட முறைகேடு அம்பலமாகி, பலரும் சிபிஐ அமைப்பால் கைது செய்யப்பட்டனர்.

2024 ஆம் ஆண்டு நீட் தேர்வு மிகவும் சர்ச்சைக்குரிய தேர்வாக அமைந்தது. சந்தேகத்துக்குரிய வகையில் நம்ப முடியாத அளவுக்கு அதிக மதிப்பெண்களைச் சிலர் பெற்றது, தன்னிச்சையான



கருணை மதிப்பெண்கள் அளித்தது, ஒரே மையத்தில் பல டாப்பர்கள், 30 லட்சம் ரூபாய் முதல் 50 லட்சம் ரூபாய் வரை செலுத்தி வினாத்தாளை முன்பே பெற்றது உள்ளிட்ட புகார்கள் எழுந்தன.

குறைந்தது 155 மாணவர்கள் இந்த மோசடியால் நேரடியாகப் பயனடைந்தனர் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. பீகார், ஜார்க்கண்ட், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் அதிக மோசடி நடந்து, சிபிஐ விசாரணை நடத்தியது.

இவற்றுடன், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வெளி மாநிலங்களில் தேர்வு மையம் ஒதுக்குவது போன்ற பிரச்சினைகளும் இத்தேர்வை மேலும் சர்ச்சைக்குள்ளாக்கியது. பல தேர்வு மையங்களில் சரியான உட்கட்டமைப்பு வசதிகளும் இல்லாமல் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இப்படியாக, தொடக்கம் முதலே ஏழை, கிராமப்புற, அரசுப்பள்ளி, தமிழ்வழி பயின்ற, சமூகரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு எதிரானதாக நீட் தேர்வு இருந்து வருகிறது. தகுதி என்று சொல்லிவிட்டு, பணம் கொழிக்கும் வணிகமாக, பயிற்சி மையங்களால் உந்தப்பட்ட, பணக்காரர்களுக்கான தேர்வாகவே இது இருக்கிறது.

நீட் மூலமாக முளைத்துள்ள பயிற்சி மையத் தொழிலில் 70 ஆயிரம் கோடி ரூபாய் வரை புரளும் அளவுக்கு அது வளர்ந்துள்ளது. வரும் ஆண்டுகளில் இது மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல லட்சம் செலவழித்துப் பெறும் சிறப்புப் பயிற்சி இன்றி நீட் தேர்வில் வெற்றி என்பது சாத்தியமில்லை என்ற நிலை உருவாகி உள்ளது.

கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, குறிப்பாக முதல் தலைமுறையாகப் பயிலும் மாணவர்களுக்கு நீட் ஒரு பெரும் தடைக்கல்லாகி இருக்கிறது. அவர்கள் மாநிலப் பாடத்திட்டத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றும் சிஙிஷிணி பாடத்திட்டத்துக்குச் சாதகமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் நீட் தேர்வில் கோச்சிங் இல்லாமல் போட்டி போட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நீட் தேர்வுக்கு முந்தைய, தமிழ்நாடு அரசின் ப்ளஸ் டூ மதிப்பெண் அடிப்படையிலான சேர்க்கை மாடல் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான வாய்ப்புகளை உறுதிப்படுத்தியது. இந்தியாவின் மிக வலிமையான பொது சுகாதார அமைப்பைத் தமிழ்நாட்டில் கட்டமைத்தது இந்த மாடல்தான். நீட் இதனைச் சீர்குலைக்கிறது. நீட் தேர்வு முறை உருவாக்கும் மன அழுத்தத்தால் மாணவர்களின் உயிரும் பறிபோகின்றன.

இதனை நன்கு உணர்ந்ததால்தான், நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது நீட் தேர்வைக் கடுமையாக எதிர்த்து, மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையில் மாநில உரிமைகள் மீட்கப்பட வலியுறுத்தினேன்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்வினை வெளிப்படுத்தும் வகையில், நீட் விலக்குக்காக, 2021ஆம் ஆண்டும், ஆளுநர் திருப்பி அனுப்பியதால், மறுமுறை 2022ஆம் ஆண்டும் என இரு முறை சட்டம் இயற்றினோம். மாநிலச் சட்டமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட அந்தச் சட்டம் மூன்று ஆண்டுகளாகக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக நிலுவையில் இருந்து, 2025ஆம் ஆண்டு ஏப்ரலில், ஒப்புதலை நிறுத்தி வைப்பதாக அவர் அறிவித்தார். அது மக்களிடையே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. குடியரசுத் தலைவர் அவர்களின் முடிவினை எதிர்த்து, எனது அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கும் நிலுவையில் இருக்கிறது.

நீட் மொத்தமாக ஒழிக்கப்பட வேண்டும் எனும் எனது கோரிக்கையை மீண்டும் தங்களிடம் வலியுறுத்தும் அதேவேளையில், இந்த ஆண்டு நீட் தேர்வு இரத்து செய்யப்பட்டுள்ளதால் சில உடனடிச் சிறப்பு நடவடிக்கைகளையும் எடுக்கக் கோருகிறேன்.

தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019இன்படி மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையானது நீட் எனும் பொது நுழைவுத் தேர்வின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், தற்போது நிலவும் அசாதாரணச் சூழலில், மீண்டும் நீட் தேர்வினை நடத்தினால், ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு, அது மற்றுமொரு சுமையாகவே அமையும்.

அதனால், 2026 27 கல்வியாண்டுக்கான நீட் தேர்வினை இரத்து செய்து, பள்ளிப் பொதுத்தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மாநில அரசுகளே மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை நிரப்ப அனுமதிக்க வேண்டும்.

தற்போது, நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறாத நிலையில், இதற்காகத் தங்கள் அரசு,தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019இன் 14ஆம் பிரிவினைத் திருத்தி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 123இன்படி, ஓர் அவசரச் சட்டத்தை இயற்றிட வேண்டும்.

பிரதமர் எனது இந்தக் கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு, இலட்சக்கணக்கான இளைஞர்கள், குறிப்பாக கிராமப்புற பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவர்களின் எதிர்காலத்தை உறுதிசெய்திட வேண்டும்'' என்று அந்தக் கடிதத்தில் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## ஜல்லித்தூள்கள் நிறைந்த தார் சாலை பகுதியினை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளபடுமா!

குன்னூர் மே,16-

குன்னூர் தாலுகாவிற்கு உட்பட்ட, பாய்ஸ்கம்பெனி பகுதியிலிருந்து உபதலை செல்லும் சாலை பகுதி ஜல்லித்தூள்கள் நிறைந்து காணப்படும் நிலையில்

சாலையில் செல்லும் மருத்துவ வாகனம், இரு சக்கர வாகன ஓட்டிகள், மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டிகள், சிற்றுந்து ஆகிய வாகன ஓட்டிகள் ஜல்லிதுகள்கள் நிறைந்த சாலையில் வாகனங்கள் ஓட்டும் போது பாதிக்கும் நிலை.



நடந்து செல்லும் பொது மக்கள் பாதிக்கபடும் நிலை. , தற்போது நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் துவங்கியுள்ள நிலையிலும், அதனை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் ஜூன் மாதம் முதல் தென்மேற்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், இந்த சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள், மற்றும் பொது மக்கள் என, அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கபடாமல் இருக்க, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஜல்லித்துகள்கள் நிறைந்த இந்த சாலை பகுதியினை உடனடியாக சரி செய்ய இதன் சம்மந்தப்பட்ட துறை நடவடிக்கை மேற்கொள்ளபடுமா என பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், வாகன ஓட்டிகள் கேள்வி !

# வேளாண் துறையின் புதிய அப்டேட்!..

தேனி மே.16-

தேனி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சார்ந்த அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கு ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடையாள எண்ணைக் கொண்டு இனிவரும் காலங்களில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண்மைப்பொறியியல்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகூட்டுறவுத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை மற்றும்




ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகிய துறைகளில் விவசாயம் சார்ந்த திட்டப்பலன்கள் பயன்பெற முடியும். ஒவ்வொரு முறையும் நில ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டியது இல்லை.

வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் அனைத்து கிராமங்களிலும் கடந்த 11.05.2026 முதல் முகாம் நடைபெற்று வருகிறது. எனவே, விவசாயிகள் இம்முகாமில் தங்களது நில ஆவணங்களான சிட்டா, ஆதார் அட்டை மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட மொபைல் எண் ஆகியவற்றை கொண்டு வந்து பதிவுகள் மேற்கொள்ளலாம். அவ்வாறு பெறப்பட்ட எண்ணானது வருவாய்த்துறையினரால் அங்கீகரிக்கப்படும். மேலும், இம்முகாம் வருகின்ற 25.05.2026 வரை நடைபெறும்.தேனி மாவட்டத்தில் மொத்தமுள்ள 50406 விவசாயிகளில் 41877 விவசாயிகள் மட்டுமே அடையாள எண் பெற்றுள்ளார்கள். எஞ்சிய 8529 விவசாயிகள் இன்னும் அடையாள எண் பெறவில்லை. பிரதமரின் கௌரவத்தொகை பெறும் பயனாளிகளில் இதுவரை 3564 விவசாயிகள் இன்னும் அடையாள எண் பெறவில்லை. இவர்களுக்கு அடுத்த தவணை நிதி நிறுத்தி வைக்கப்படும். எனவே அரசின் நலத்திட்ட உதவிகள் பெற விரும்பும் அனைத்து விவசாயிகள் மற்றும் PM Kisan நிதியினை தொடர்ந்து பெற விரும்பும் விவசாயிகளும் உடனடியாக சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பதிவுகள் மேற்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

## அருள்மிகு நந்தீஸ்வரர் திருக்கோயிலில் பிரதோஷ வழிபாடுதிரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம்

கிருஷ்ணகிரி, மே 16-

காவேரிப்பட்டணம் அருகே அரசுப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன்னன் நகர், தமட்ட குட்டையில் அமைந்துள்ள அருள்மிகு நந்தீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று மாலை பிரதோஷ வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். வியாழக்கிழமையை முன்னிட்டு நடைபெற்ற பிரதோஷ



வழிபாட்டையொட்டி, மூலவருக்கு பால், தயிர், தேன், இளநீர், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு அபிஷேகங்கள் செய்யப்பட்டு, சிறப்பு அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.மாலை 4.30 மணி முதல் நடைபெற்ற வழிபாட்டில் பக்தர்கள் நந்தீஸ்வரருக்கு முன்னால் நெய் விளக்கேற்றி, பிரார்த்தனை செய்து வழிபட்டனர். தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.



## மழை, வெள்ளம் இயற்கை இடர்பாடுகளுக்கு முன்னெச்சரிக்கையாக துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம்

கிருஷ்ணகிரி,மே 16-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூன் முதல் செப்டம்பர் 2026 வரை தென்மேற்கு பருவ காற்றினால் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால், மழை வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளை தடுக்க ஏதுவாக முன்னேற்பாடுகள் மற்றும் தயார்நிலை பணிகள் குறித்து வருவாய் துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மருத்துவத்துறை, கால்நடைபராமரிப்புத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம், ஓசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, கிருஷ்ணகிரி வருவாய் கே ாட்டாட்சியர் ஷாஜகான், பேரிடர் மேலாண்மைத்துறை வட்டாட்சியர் வெங்கடேசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## கிருஷ்ணகிரியில்குடிநீர் வினியோக திட்டப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம்

கிருஷ்ணகிரி,மே.16-

கிருஷ்ணகிரியில் குடிநீர் வினியோக திட்டப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது.ஆய்வு கூட்டம்

ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி மற்றும் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் பல்வேறு குடிநீர் வினியோக திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. அதே போல பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடந்து வருகின்றன. இது தொடர்பான ஆய்வு கூட்டம் கலெக்டர் தினேஷ்குமார் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் மாவட்டம் முழுவதும் கோடை காலத்தை முன்னிட்டு குடிநீர் சீராக வினியோகம் செய்ய வேண்டும். மேலும் வளர்ச்சி திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு கலெக்டர் தினேஷ்குமார் அறிவுரை வழங்கினார்.

இதில் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகர், ஓசூர் மாநகராட்சி செயற்பொறியாளர் விக்டர் ஞானராஜ், பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தவெக அமைச்சரவையில் சேர காங்கிரசுக்கு அழைப்பு: மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தகவல்

சென்னை: மே,16-

முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அமைச்சரவையில் இடம் பெற அழைப்பு வந்துள்ளது என தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்எல்ஏக்களுடன் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சந்தித்தோம்.அப்போது அவர், எம்எல்ஏக்கள் அனைவரும் மக்களுக்காக கடினமாக



உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதைத் தொடர்ந்து, ராகுல் காந்தியை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டோம். அப்போது பேசிய ராகுல் காந்தி, தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை புதிதாக கட்டமைக்க இதுவே சரியான நேரம். கட்சியை பலப்படுத்த கடுமையாக பாடுபட வேண்டும்.புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட எம்எல்ஏக்கள் கட்சியை வலுப்படுத்த எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அகில இந்திய காங்கிரஸ் தலைமை முழு ஒத்துழைப்பை வழங்கும் என்றார்.மேலும், தமிழக அமைச்சரவையில் இடம் பெற எங்களுக்கு தவெக அழைப்பு விடுத்துள்ளது. இதன்மூலம் மக்களுக்குத் தேவையான நற்பணிகளை முன்னெடுப்போம். எத்தனை அமைச்சர்கள் இடம் பெறுவார்கள் என்பது குறித்து தற்போது ஆலோசனை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்

## தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து துறை சார்பில் பள்ளி வாகனங்கள் ஆய்வு

உத்தமபாளையம் மே 16-

தேனி : மாவட்டம் உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து துறை சார்பில் ஜூன் மாதம் முதல் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் உத்தமபாளையம் போக்குவரத்து துறை வட்டாரத்திற்கு உட்பட்ட கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் , போடிநாயக்கனூர், தேவாரம், பன்னைப்புரம், அகிய பகுதிகளில் உள்ள 41 பள்ளிகளின் 287 வாகனங்கள் தகுதி குறித்து ஆய்வு நடைபெற்றன. இந்த ஆய்வை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் உத்தமபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் சுந்தராமன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.



பள்ளி வாகனத்தில் அவசர வழி கதவுகள் முதல் உதவி பெட்டி, சி சிடி வி கேமராக்கள், வேக கட்டுபாட்டு கருவி பொறுத்தப்பட்டு உள்ளதா என்பது குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் 287 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் 22 வாகனங்கள் மட்டும் உரிய முறையில் இல்லை என்பதால் திருப்பி அனுப்பபட்டன. மேலும் திருப்பி அனுப்பபட்ட 22 பள்ளி வாகனங்கள் ஒரு வாரகால அவகாசத்திற்குள் குறைகளை சரி செய்த பின் மோட்டார் வாகனஆய்வாளர் ஆய்வு உட்படுத்த வேண்டும் என அறிவுறுத்தி அனுப்பபட்டன.



## தஞ்சாவூர் சுவாமிமலை அருகே வெடித்து சிதறிய பட்டாசு ஆலை

தஞ்சாவூர்:மே.16-

சுவாமிமலை அருகே மணப்படையூர் கிராமத்தில் ஜேசுதாஸ் மற்றும் மேரிசெல்வராணி என்பவருக்கு சொந்தமான நாட்டுவெடி தயாரிக்கும் கூடம் அமைந்துள்ளது. இங்கு பண்டிகை காலங்களில் நாட்டு வெடிகள் மற்றும் வான மத்தாப்புகள் ஆகியவை தயார் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டம் முழுவதும் திருவிழா காலம் என்பதால் அதிக அளவிலான வெடிகள் தயாரிக்கபட்டு சேமிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று காலை வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த வெடி விபத்தில் சேமிக்கப்பட்டிருந்த சுமார் 1000 டன் அளவிலான வெடிகள் வெடித்து சிதறியது. இதனால் கட்டிடம் முழுவதும் தரைமட்டமானது. காலை நேரம் என்பதால் ஊழியர்கள் யாரும் இல்லாமல் இருந்ததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இந்த தகவலை அறிந்து வந்த சுவாமிமலை காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் எரிந்து கொண்டிருக்கும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும், அங்கு வெடிகள் இருப்பதால் இன்னும் வெடிகள் வெடித்து கொண்டு இருப்பதாக காவல் துறையினர் தெரிவித்தனர். ஏற்கனவே இதே பகுதியில் கடந்த 1 வாரத்திற்கு முன்பு வெடி விபத்து ஏற்பட்டு மற்றொரு கட்டிடம் சேதமானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விபத்து குறித்து காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

## வெளிநாட்டில் குடியுரிமை பெற்று தமிழகத்தில் வாக்களித்த 17 பேர் கைது நடந்தது என்ன?

சென்னை:மே 16-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. எப்போதும் இல்லாத வகையில் இந்தமுறை அரசியல் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. இந்நிலையில் பலர் வெளிநாட்டு குடியுரிமை பெற்றிருந்தும் தமிழகம் வந்து வாக்களித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.இந்திய நாட்டு குடிமக்கள் மட்டுமே இந்தியாவில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க முடியும். வெளிநாடுகளில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதோடு, அந்த நாட்டு பிரஜையாகவும் மாறி குடியுரிமை பெற்று விட்டால் அவர்களுக்கு இந்திய பாஸ்போர்ட்டுகள் ரத்து செய்யப்பட்டு, அந்த நாடுகளின் பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டுவிடும்.அப்படிப்பட்ட வெளிநாட்டு குடியுரிமை பெற்ற இந்தியர்கள், இந்தியாவுக்கு வழக்கம்போல் வந்து சென்று கொண்டிருக்கலாம். ஆனால், இந்தியாவில் நடக்கும் தேர்தல்களில் வாக்களிக்க முடியாது.இந்நிலையில்தான் நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க, வெளிநாடுகளில் வசிக்கும் ஏராளமான தமிழர்கள், இங்கு வந்து சொந்தத் தொகுதியில் வாக்



களித்ததாக தகவல் வெளியானது.இதுகுறித்து இந்திய தேர்தல் ஆணையத்துக்கு தகவல் சென்றது. அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் சென்னை, திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்களில் உள்ள குடியுரிமை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். வெளிநாடுகளுக்குச் செல்ல விமான நிலையம் வரும் பயணிகளின் கை விரல்களைக் கண்காணிக்க உத்தரவிடப்பட்டது. வாக்களித்த அடையாள மை இருந்து, அவர்கள் வெளிநாடு வாழ் இந்திய குடியுரிமை பெற்ற பயணியாக இருந்தால், அவர்களை விமானங்களில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டாம்.

அவர்களின் விமானப் பயணங்களை ரத்துசெய்து, அவர்களை காவல் நிலையங்களில் ஒப்படைக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி வெளிநாடு செல்ல சென்னை விமான நிலையம் வந்த சில வெளிநாடு வாழ் இந்தியர்கள், தேர்தல் ஆணைய விதிமுறைகளுக்குமாறாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களித்துள்ளது தெரியவந்தது.அவர்கள் சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் உள்ள வாக்குச்சாவடிகளில் வாக்களித்துள்ளனர். அதேபோல தமிழகத்தில் உள்ள பல்வேறு விமான நிலையங்களில் குடியுரிமை அதிகாரிகள் நடத்திய சோதனையிலும் பலர் சிக்கியுள்ளனர்.இப்படி சென்னை உட்பட தமிழகம் முழுவதும் விமான நிலையங்களில் சுமார் 17 பேர் பிடிபட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஆஸ்திரேலியா, இலங்கை, கனடா, ஐரோப்பா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் குடியுரிமைகள் பெற்றவர்கள் என்று தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளில் நிரந்தர குடியுரிமை பெற்றிருந்தாலும் நடந்து முடிந்த எஸ்ஐஆர் பணிகளில் இவர்கள் ஆன்லைன் வாயிலாக விண்ணப்பித்து வாக்காளர் அடையாள அட்டைகளைப் பெற்று வாக்களித்ததாக தெரியவந்துள்ளது. இந்த விவகாரம் குறித்து முழு விசாரணை நடத்த காவல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி தவெக எம்எல்ஏவிற்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு

கிருஷ்ணகிரி,மே16-

கிருஷ்ணகிரி தவெக சட்டப்பேரவை உறுப்பினர் முகுந்தனுக்கு, கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தலில், கிருஷ்ணகிரி தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த முகுந்தன் வெற்றி பெற்றார். தொடர்ந்து, சட்டப்பேரவையில் உறுப்பினராக பதவியேற்று கொண்டு, வாக்கெடுப்பிலும் கலந்து



கொண்டார். பின்னர், நேற்று சென்னையில் இருந்து கிருஷ்ணகிரிக்கு திரும்பிய தவெக எம்எல்ஏ முகுந்தனுக்கு, கிருஷ்ணகிரி நகர செயலாளர் சசிகுமார் தலைமையில் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். கிருஷ்ணகிரி ரவுண்டான பகுதியில் பட்டாசுக்கள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்விற்கு மாவட்ட நிர்வாகிகள் இளையப்பன், ரத்தினவேல், பயாஸ், பாஷா, சுரேஷ், ஹேமபிரியா, மகளிரி அணி கோவிந்தி, கீர்த்தினா ஆகியோர் முன்னிலை வகித்தனர். அப்போது எம்எல்ஏ பேசியதாவது: தமிழக முதல்வர் விஜய் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும், கிருஷ்ணகிரி சட்டப்பேரவை தொகுதியின் கடைக்கோடி மக்களுக்கு சென்று சேர்க்கப்படும். தொகுதியின் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் நடவடிக்கை எடுப்பேன், என்றார். இந்நிகழ்வில், கிருஷ்ணகிரி ஒன்றிய செயலாளர்கள் சந்திரசேகர், அருண், சங்கர், கோவிந்தராஜ், ஹரி, காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் விஜயகுமார், பேரூர் செயலாளர் தமிழ்குமரன் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



## ஆற்காடு ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் விஷ்ணுபதி புண்ணிய கால சிறப்பு பூஜை

ராணிப்பேட்டை மே.16- ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தென் பாலாற்றங்கரையில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பெருந்தேவி தாயார் சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் விஷ்ணுபதி புண்ணிய காலம் சிறப்பு பூஜை நடைபெற்றது. முன்னதாக அதிகாலை 5 மணிக்கு ஸ்ரீ வரதராஜ பெருமாளுக்கும், பெருந்தேவி தாயாருக்கும் பல்வேறு வாசனை திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகமும், வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு ஆராதனையும் அதனைத் தொடர்ந்து கோ பூஜையும் நடைபெற்றது. விஷ்ணுபதி புண்ணிய காலம் என்பது வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி ஆகிய மாத பிறப்பு அன்று சூரியன், ரிஷபம், சிம்மம், கும்பம், விருச்சகம் ஆகிய ராசிகளில் பிரவேசிக்கும் நேரம் ஆகும். இந்த நேரத்தில் பெருமாளையும், விஷ்ணு வையும் நினைத்து கோயிலை 27 முறை வலம் வந்து வேண்டுதல் வைக்கும் போது அது உடனடியாக நிறைவேறுவதாக ஐதீகம். பக்தர்கள் அதிகாலை முதலே ஏராளமான பக்தர்கள் கோயிலை 27 முறை வலம் வந்து வேண்டுதல் வைத்து சென்றனர். இந்த நிகழ்ச்சியை அறங்காவலர் குழு தலைவர் ஏ பி சத்தியநாராயணன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் தேவி, வாசுகி சரவணன், சீனிவாசன், சேஷாத்திரி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியில் அனைவருக்கும் கோவில் சார்பாக பிரசாதம் வழங்கப்பட்டது.

## கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணத்தில் இறைச்சி கடைகளில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வு

### 10 கிலோ கெட்டுபோன மீன்கள் பறிமுதல்

கிருஷ்ணகிரி,மே.16- கிருஷ்ணகிரி காவேரிப்பட்டணத்தில் உள்ள இறைச்சி கடைகளில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வு செய்து 10 கிலோ கெட்டுபோன மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.அதிகாரிகள் ஆய்வுகிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் உத்தரவின்பேரில் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் டாக்டர் செந்தில்குமார் தலைமையில் கிருஷ்ணகிரி நகராட்சி, வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் ஜனகர் ஜோதிநாதன், வேப்பனப்பள்ளி வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் ராஜசேகர், காவேரிப்பட்டணம் அலுவலர் அஸ்வினி ஆகியோர் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர். கிருஷ்ணகிரி பழைய பேட்டை மீன் மார்க்கெட், கே.ஆர்.பி. அணை ரோடு, காவேரிப்பட்டணம் ஆகிய



இடங்களில் இந்த ஆய்வை மேற்கொண்டனர். அப்போது ஒரிரு கடைகளில் 10 கிலோ அளவுக்கு கெட்டு போன மீன்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் பினாயில் ஊற்றி அழிக்கப்பட்டது. எச்சரிக்கை,இதே போல ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி மற்றும் மாட்டு இறைச்சி கடைகளில் ஆய்வு செய்து சுகாதார தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் உரிமம் இல்லாத கடைகள் கண்டறியப்பட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டன. தொடர்ந்து மீறி விற்பனை செய்தால் அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.




## நெளாம்பூரில் உள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் நடைபெற்ற CBSE தேர்வில் மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று மீண்டும் சைதன்யா பள்ளி சாதனை

### மாணவர்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்து

சென்னை மே.16- நெளாம்பூரில் உள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் நடைபெற்ற சிபிஎஸ்இ என்ற மத்திய இடைநிலை கல்வி வாரியம் பொதுதேர்வில் மாநில அளவில் இமானுவேல் 492 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், ஜஸ்வந்த்குமார் 491 மதிப்பெண்களும், நேதேஷ் 490 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தனர். இவர்களை கௌரவிக்கும் வகையில் ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விருது மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக ஸ்ரீ சைதன்யா டெக்னோ கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள் சுஷ்மா பொப்பண்ணா, நாகேந்திரகாரு, செயல்பாட்டு தலைவர் ஹரிபாபு ஆகியோர் கலந்து கொண்டு கேக் வெட்டியும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பூங்கொத்து மற்றும் விருது, சான்றிதழ் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். இது குறித்து இயக்குநர்கள் பேசுகையில் எங்கள் மாணவர்கள் கடுமையான கல்வியாண்டை தன்நம்பிக்கையுடனும், உறுதியுடனும் எதிர்கொண்டு உண்மையான சாதனையாளர்களாக உருவெடுத்துள்ளனர், அவர்களது வெற்றி முழுமையான வளர்ச்சியும் உயர்ந்த கல்வி தரத்தை உருவாக்கும் என தெரிவித்தார். இதில் சைதன்யா பள்ளியின் முதல்வர்கள், ஆசிரிய பெருமக்கள், பெற்றோர்கள் உட்பட மாணவ, மாணவிகள், ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

## சிபிஐ இயக்குனர் பதவி நீட்டிப்பு மற்றும் நீட் தேர்வுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி, மே 16: கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், சிபிஐ இயக்குனரின் பதவி நீட்டிப்பை கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும், மத்திய பாஜக அரசை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை முன்பு நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி. ரகு தலைமை தாங்கினார். நகர தலைவர் லலித் ஆண்டனி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட துணைத் தலைவர்கள் தளபதி ரகமத்துல்லா, ஆறுமுக சுப்பிரமணி, விநாயகம், வட்டார தலைவர்கள் ஜெயவேல், நஞ்சுண்டன், மாவட்ட பொதுச் செயலாளர் அப்சல், ஊத்தங்கரை நகர தலைவர் விஜயகுமார், டாக்டர் தகி, சக்திவேல், சுந்தரேசன், ஆஜித் பாஷா, சக்கரவர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச் செயலாளர் ஏகம்பவாணன் என்கிற கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் மாவட்ட தலைவர் ராஜ்குமார் வேல் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அவர்கள் பேசுகையில், சிபிஐ போன்ற விசாரணை அமைப்புகள் அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதாக குற்றம்சாட்டினர். மேலும், மாணவர்களின் மனஅழுத்தத்திற்கும், கிராமப்புற மற்றும் ஏழை மாணவர்களின் கல்வி வாய்ப்பை பறிக்கும் வகையிலும் உள்ள நீட் தேர்வை மத்திய அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவிந்தசாமி, சித்திக், வழக்கறிஞர் ஷபிக் அஹமத், பாண்டுரங்கன், முன்னாள் நகர தலைவர் வின்சென்ட், சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் முனீர், மனோகரன், மீனவர் செல்வம், மாரியப்பன், சதாம் உசேன், குட்டி என்கிற விஜயராஜ், சரவணன், நசீம், சம்பத், சங்கர், வெங்கடபதி, சின்னதம்பி, முஸ்தாக், நடேசன், பழனிச்சாமி, வெங்கடேசன், கருணாமூர்த்தி, ஹரி, முனவர், ஏழுமலை, வெங்கடாசலம், சேகர் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

இறுதியாக, ஊடகப் பிரிவு மாவட்ட தலைவர் கமலக்கண்ணன் நன்றி உரையாற்றினார்.

## வேளாண் விளைபொருட்கள் விலை மறுஆய்வு செய்ய வேண்டும்: விவசாயிகள் சங்கம் கோரிக்கை

சென்னை:மே.16- தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்ட அறிக்கை: மத்திய அரசு 202627 கரீப் பருவத்துக்கு 14 வேளாண் உற்பத்தி பயிர்களுக்கு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையானது வழக்கம் போல் விவசாயிகளை ஏமாற்றும் செயலாகவே உள்ளது.கடந்த 16 ஆண்டுகளாக போராடிவரும் விவசாயிகளின் அடிப்படை கோரிக்கையான, வேளாண் ஆணையத் தலைவர் எம்.எஸ்.சுவாமிநாதனின் பரிந்துரையான 'சி 2 + 50' (சாகுபடி செலவுடன் 50 சதவீத லாபம்) என்ற முறையிலான விலை நிர்ணயத்தை இந்த முறையும் பாஜக அரசு அறிவிக்கவில்லை.மாறாக, 'சி 1



+ 50' என்ற முறையை அறிவித்துவிட்டு, அதுதான் உண்மையான பரிந்துரை என்று விவசாயிகளை வஞ்சிப்பது கண்டிக்கத்தக்கது. கடந்த 200414 வரையிலான 10 ஆண்டுகளில் 4,590 லட்சம் டன்களாக இருந்த கொள்முதல், 2014 26 காலகட்டத்தில் 8,418 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.இச்சூழலில், அதற்கான உரிய விலை உயர்வை வழங்காமல், நெல் குவிண்டாலுக்கு வெறும் ரூ.72 மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.இதன் மூலம், சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.2,441 ஆகவும், சன்ன ரக நெல் ரூ.2,461 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.வேளாண் ஆணையத்தின் பரிந்துரைப்படி, அனைத்து விளைபொருட்களுக்கும் 'சி 2 + 50' என்ற அடிப்படையில் விலையை மறுஆய்வு செய்து அறிவிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## "பெட்ரோல், டீசல் விலை உயர்வால் அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் அபாயம்" தினகரன்

சென்னை:மே,16- 'பெட்ரோல், டீசல் விலை உயர்வால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலனை கருத்தில் கொண்டு பெட்ரோல், டீசல் விலை உயர்வை எண்ணெய் நிறுவனங்கள் திரும்பப் பெற வேண்டும்' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'உலகளவிலான சந்தையில் கச்சா எண்ணெயின் தொடர் விலையேற்றத்தால் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு தலா 3 ரூபாயும், இயற்கை எரிவாயு விலை 2 ரூபாயும் நள்ளிரவு முதல்



உயர்த்தப்பட்டு புதிய விலை அமலுக்கு வந்துள்ளன. வளைகுடா நாடுகளில் நீடிக்கும் போர் பதற்றத்தால் கச்சா எண்ணெய் கொண்டுவருவதில் ஏற்பட்ட தடங்கலும், பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிதி இழப்பாலும், பெட்ரோல், டீசல் விலை உயர்வு தவிர்க்க முடியாதது என்றாலும், அதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏழை, எளிய மக்கள் பல்வேறு விதமான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் நிலை ஏற்பட்டுள்ளது.எனவே, பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பொதுப் போக்குவரத்துக்கான செலவோடு, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் பன்மடங்கு உயர்ந்து அவர்களுக்கு பல்வேறு விதமான பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொண்டு பெட்ரோல் விலை உயர்வை எண்ணெய் நிறுவனங்கள் திரும்பப் பெறுவதை உறுதி செய்திட வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.



## மழைப்பொழிவு அச்சத்தில் விவசாயிகள்

## நெல் கொள்முதலை விரைவுபடுத்த வலியுறுத்தல்

மதுராந்தகம்:மே 16- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் 171 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.மேலும், நடப்பாண்டில் கூடுதலாக நெல் பயிரிட்டு அறுவடை செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில், விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்து வைத்துள்ள நெல்லை விரைவாக கொள்முதல் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பல நாட்கள் காத்திருந்து நெல் வழங்கும் நிலை உள்ளது. தற்போது, திடீரென மழை பெய்வதாலும்,மழைப்பொழிவு ஏற்படும் என வானிலை மையம் அறிவித்துள்ளதால், அறுவடை செய்து வந்துள்ள நெல், கொள்முதல் நிலையங்களில் மழையில் நனைந்து சேதமடையாத வகையில், விரைவாக கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## வைகை அணையின் நீர்மட்டம் 26 அடியாக குறைவு

தேனி:மே 16- தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணையின் நீர்மட்டம் 26 அடியாகக் குறைந்து, அணை தற்போது சிறிய குளம் போல் காட்சியளிக்கிறது. கடந்த ஆண்டு பருவ மழையின் அளவு குறைந்ததாலும் பாசனத்திற்காக தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதாலும் கோடை வெயில் மற்றும் போதிய மழையின்மையால் அணையின் நீர் மட்டம் கடுமையாக சரிந்துள்ளது. அணையின் மொத்த கொள்ளளவான 6091 மில்லியன் கன அடியில் தற்போது வெறும் 246 மில்லியன் கன அடி மட்டுமே நீர் இருப்பில் உள்ளது. இந்த நீர் நிலை தொடர்ந்தால், குடிநீர் தேவைக்கு இன்னும் சுமார் 17 நாட்கள் மட்டுமே தண்ணீர் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.அணைப்பகுதியில் 10 முதல் 15 அடி வரை வண்டல் மண் படிந்துள்ளதால், சுமார் 6 அடி தண்ணீர் மட்டுமே பயன்பாட்டிற்கு உள்ளது. இதனால் வைகை அணையை முதன்மை நீராதாரமாகக் கொண்டுள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் உருவாகியுள்ளது. தென்மேற்கு பருவ மழை கைகொடுத்தால் மட்டுமே இந்த இக்கட்டான சூழலை சமாளிக்க முடியும் என பொதுபணி துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

## திமிரி, குண்டலேரியில் சுபத்திரை திருக்கல்யாண வைபவம்

ராணிப்பேட்டை மே,16- ராணிப்பேட்டை மாவட்டம் கலவை வட்டம் குண்டலேரி, மருதமங்கலம் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் மகாபாரத சொற்பொழிவு, அக்னி வசந்த விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. மே 01 தேதி வசந்த கொடியேற்றுதுடன் துவங்கிய நிகழ்ச்சியில் தினந்தோறும் வேலூர் வெட்டுவானம் நா. நய நர்த்தகி .ரேவதி அம்மாள் அவர்களின் மகாபாரத சொற்பொழிவு நிகழ்ச்சியும், ஆரணி சிவா அம்மு நாடக குழுவினரால்



கொடம்பாடி சரஸ்வதி கட்டைக்கூத்து நிகழ்ச்சியும் நடைபெற்று வந்த நிலையில் பதினாறாம் நாளான நேற்று ராஜசூயயாகமும் அதனைத் தொடர்ந்து பரதாமி யாதவ சமூகத்தினரால் சுபத்திரை திருக்கல்யாணமும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை ஆலய நிர்வாகிகள் சண்முகவேலு, சரவணன், குமார் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை வட்டம் குண்டலேரி, மருதமங்கலம் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் மகாபாரத சொற்பொழிவு, அக்னி வசந்த விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. மே 01 தேதி வசந்த கொடியேற்றுதுடன் துவங்கிய நிகழ்ச்சியில் தினந்தோறும் வேலூர் வெட்டுவானம் நா. நய நர்த்தகி .ரேவதி அம்மாள் அவர்களின் மகாபாரத சொற்பொழிவு நிகழ்ச்சியும், ஆரணி சிவா அம்மு நாடக குழுவினரால் கொடம்பாடி சரஸ்வதி கட்டைக்கூத்து நிகழ்ச்சியும் நடைபெற்று வந்த நிலையில் பதினாறாம் நாளான நேற்று ராஜசூயயாகமும் அதனைத் தொடர்ந்து பரதாமி யாதவ சமூகத்தினரால் சுபத்திரை திருக்கல்யாணமும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை ஆலய நிர்வாகிகள் சண்முகவேலு, சரவணன், குமார் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் .க.கார்த்திகேயன் அவர்கள் உள்ளார்.



■ செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி அரசு தகைசால் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் PCVC தன்னார்வ அமைப்பு மூலம் மாணவிகளுக்கு கோடைகால சிறப்பு பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், துவக்கி வைத்தார்கள். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .திருவளர்ச்செல்வி மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் பரபரப்பு: மேடையில் பேசாமல் சென்ற தவெக எம்எல்ஏ குழந்தை நாச்சியார் - ஆதரவாளர்கள் அதிர்ச்சி!

சிவகங்கை, மே ,16-

சிவகங்கை சட்டமன்ற தொகுதி உறுப்பினராகப் பதவியேற்றுள்ள தமிழக வெற்றிக்கழகத்தைச் சேர்ந்த குழந்தை நாச்சியார், முதன்முறையாக சிவகங்கைக்கு வருகை தந்தபோது ஏற்பட்ட ஒரு நிகழ்வு உள்ளூர் வட்டாரத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.உற்சாக வரவேற்பும் பேரணியும்பதவியேற்புக்குப் பின் சிவகங்கை நகருக்குள் முதன்முறையாக வருகை தந்த எம்எல்ஏ குழந்தை நாச்சியாருக்கு, கட்சியின் சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

நகரின் எல்லைப் பகுதியில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், மலர் தூவியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து, நகரின் முக்கிய வீதிகள் வழியாக உற்சாகப் பேரணி நடைபெற்றது. இறுதியாக, அங்குள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டு விழாவில் அவர் கலந்து கொண்டார். திடீர் ஏமாற்றம்: என்ன நடந்தது?விழா மேடையில்



கட்சி நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் திரண்டு வந்து அவருக்குச் சால்வை அணிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். நீண்ட நேரமாகக் காத்திருந்த ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில், தொகுதி எம்எல்ஏ குழந்தை நாச்சியார் எழுச்சியுரையாற்றுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அரங்கில் இருந்தவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக, அவர் மேடையில் எந்தவொரு உரையும் ஆற்றாமல் திடீரென அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.அவரது கணவர் அவரை மேடையில் பேச வேண்டாம் என்றும், செய்தியாளர்களைச் சந்திக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தியதே இதற்குக் காரணம் என்று விழா வட்டாரத்தில் பரவலாகக் கூறப்படுகிறது.மக்கள் மற்றும் தொண்டர்கள் ஆதங்கம்எம்எல்ஏவின் இந்தத் திடீர் மௌனமும், உரையாற்றாமல் சென்றதும் விழாவிற்கு வந்திருந்த தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியலில் பெண்களுக்குச் சம உரிமை மற்றும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் வாய்ப்புகள் வழங்கப்படும் சூழலில், தேர்ந்தெடுக்கப்படும் பெண் மக்கள் பிரதிநிதிகள் தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட வேண்டும் என்பதே சிவகங்கை தொகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. மக்கள் குறைகளைக் கேட்டு, அவர்களுடன் நேரடியாகத் தொடர்பில் இருக்க வேண்டிய ஒரு மக்கள் பிரதிநிதி, ஆரம்பத்திலேயே மேடையில் பேசாமல் தவிர்த்திருப்பது பொதுமக்களிடையே அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

## அக்னி நட்சத்திரத்துக்கு இடையே புதுச்சேரியில் இடி மின்னலுடன் பெய்த மழை

புதுச்சேரி:மே.16-

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் கோடை அக்னி நட்சத்திர வெயிலிலும் புதுச்சேரியில் இடி மின்னலுடன் மழை பொழிந்தது.புதுவையில் கோடை காலமான மார்ச், ஏப்ரலில் வெப்பத்தின் தாக்கம் அதிகமானதால் பகலிலும்கூட வீட்டில் மக்கள் முடங்கினர். மே மாத தொடக்கத்திலேயே 100 டிகிரியை வெப்பத்தின் தாக்கம் பதிவானது. இந்நிலையில், அக்னி நட்சத்திரத்தில் வெப்பத்தின் தாக்கம் எப்படியிருக்குமோ என மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளான மே 4ல் மழை பொழிந்தது. தொடர்ந்து அடுத்தடுத்த



நாட்கள் இரவிலும், சில நாட்களில் அதிகாலையிலும் மழைப் பொழிவு தொடர்ந்தது. இருந்தாலும், பகலில் வெயிலின் தாக்கம் இருந்தது. இந்நிலையில் நேற்று நள்ளிரவு முதல் புதுச்சேரியில் மழை பொழிவு இருந்தது. வானம் இருண்டு குளிர்ந்த காற்றுடன் பலத்த இடியுடன் இன்று காலை முதல் மழைப் பொழிவு தொடர்ந்தது. இதனால் மக்கள் நிம்மதியடைந்தனர். இதுகுறித்து காரைக்காலை சேர்ந்த வானிலை ஆர்வலர் பிரபு பிரபாகர் கூறுகையில், "புதுச்சேரிக்கு கிழக்கே 350 கி.மீ தொலைவில் தென்மேற்கு வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியும் இதற்கு முக்கிய காரணமானது. தற்போது மேற்கு நோக்கி தாழ்வுப் பகுதி நகர்கிறது. இது புயலாக வலுப்பெற வாய்ப்பு குறைவு. வங்கக் கடலிலேயே வலு குறைந்துவிடும்." என்றார்.

## திருப்பூர் மாவட்டத்தில். அனைத்து பள்ளி கல்லூரிகள் வாகனங்களை. ஆய்வு செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சியாளர் மனிஷ் நாரணரே ஆய்வு செய்தார்

திருப்பூர் மே,16-

திருப்பூர் மாவட்டம் ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், மாதப்பூரில் வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் 2026ம் ஆண்டுக்கான தனியார் பள்ளி வாகனங்கள் கூட்டாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி வாகனங்களில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது. அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வடக்கு மற்றும் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் சார்பில் திருப்பூர் வடக்கு, தெற்கு, அவிநாசி மற்றும் காங்கேயம் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட 232 பள்ளிகளை சார்ந்த 1,412 வாகனங்கள் சோதனை மேற்கொள்ளப்படவுள்ளத இப்பள்ளி வாகனங்களில்



கேமராக்கள், தீயணைப்பு கருவி மற்றும் வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டுள்ளது பற்றியும், அவசரகால வெளியேறும் வசதி, குழந்தைகள் எளிதாக வாகனத்தில் ஏற தாழ்வான படிக்கட்டுகள், பள்ளி வாகனம் என்ற அறிவிப்பு, முதலுதவிப்பெட்டி, பிரதிபலிப்பான் வில்லை ஒட்டப்பட்டுள்ளதா உள்ளிட்ட அரசு வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கண் பரிசோதனை மேற்கொண்டு மருத்துவரின் அறிவுரையை பின்பற்றி முறையாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் சாலை விதிகளை ஓட்டுநர்கள் கடைபிடிக்க வேண்டும். சாலை விதிகளை பின்பற்றுவது தொடர்பாக மாதந்தோறும் ஆய்வு கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. மேலும், பள்ளி வாகன ஓட்டுநர்கள் வாகனத்தை இயக்கும் பொழுது காக்கி சீருடை அணிய வேண்டும். பள்ளி வாகனங்களில் ரிவர்ஸ் கேமரா உள்ளிட்ட ஏதேனும் தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டால் பள்ளி நிர்வாகத்தில் வாகன ஓட்டுநர்கள் தெரியப்படுத்த வேண்டும். மேலும், பள்ளி குழந்தைகளை அழைத்து செல்லும் போது முழு கவனத்துடன் ஓட்டுநர்கள் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். ஏனவே ஓட்டுநர்கள் அனைத்து விதமான அரசு வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்தார்கள். முன்னதாக, வாகன ஓட்டுநர்களுக்கு 108 ஆம்புலன்ஸ் குழு மற்றும் தீயணைப்பு துறை சார்பில் விபத்து காலங்களில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் பள்ளி வாகனங்களின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது உடன் மாநகர போக்குவரத்து காவல் துணை ஆணையர் .ராஜராஜன் , திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் பாஸ்கர், பழனியப்பன், போக்குவரத்து ஆய்வாளர்கள் தீபா, சண்முகசுந்தரம், கவின்ராஜ், நல்லதம்பி, பாலசுப்பிரமணியம், நிர்மலாதேவி உள்ளிட்ட அலுவலர்கள், பள்ளி வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



■ செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி அரசு தகைசால் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் PCVC தன்னார்வ அமைப்பு மூலம் மாணவிகளுக்கு கோடைகால சிறப்பு பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், துவக்கி வைத்தார்கள். இதில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருவளர்ச்செல்வி மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் .எஸ்.மாலதி ஹெலன், தலைமையில் நடைபெற்றது. இதில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .ஜமன் ஜமால், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) .ஸ்ரீதேவி, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநர் சைதன்யா, துணை ஆட்சியர் (பயிற்சி) மணியரசன் மற்றும் அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், அரசினர் விருந்தினர் மாளிகையில் உள்ள கூட்டரங்கில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான அமைச்சர் ரா. நிர்மல் குமார் தலைமையில்ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,,மாநகர காவல் ஆணையாளர் அபிஷேக் தீக்சித்,இ.கா.ப.,,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ.கா.ப., ஆகியோர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

## சென்னை சோழிங்கநல்லூர் அடுத்த காரப்பாக்கத்தில் உள்ள பிரபல ஐ.டி.நிறுவனத்தில் பயங்கர தீ விபத்து!

சென்னை:மே 16-

சென்னை சோழிங்கநல்லூர் அடுத்த காரப்பாக்கத்தில் உள்ள பிரபல ஐ.டி.நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்தை அடுத்து ஐ.டி. ஊழியர்களை வெளியேற்றும். ஐடி நிறுவனத்தில் பற்றிய தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். தீ விபத்து காரணமாக காரப்பாக்கம் பகுதியில் கரும்புகை சூழ்ந்துள்ளது

## பதவியேற்ற கையோடு பழனியில் அதிரடி ஆய்வில் இறங்கினார் அதிமுக வேட்பாளர் ரவி மனோகரன். முருகன் கோவில் செல்லும் பாதையில் தேங்கிக் கிடந்த கழிவுகளை அகற்ற அதிகாரிகளுக்கு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்

, பழனி மே 16-

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழனி சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ரவி மனோகரன், சென்னையில் பதவியேற்பு விழாவை முடித்துவிட்டு இன்று தனது சொந்த ஊரான பழனிக்கு வருகை தந்தார்.ஊருக்கு வந்த முதல் நாளிலேயே, தொகுதி மக்களின் நீண்ட நாள் புகாரான சுகாதாரச் சீர்கேட்டை நேரில் ஆய்வு செய்தார். அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி முருகன் கோவிலுக்குச் செல்லும் பாதையில், கோழிக் கழிவுகளும் குப்பைகளும் மலைபோல தேங்கிக் கிடந்தன. இதனால்



அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி வந்ததோடு, பக்தர்களும் பொதுமக்களும் கடும் அவதிக்குள்ளாகி வந்தனர்."உடனடியாக சம்பவ இடத்திற்கு நகராட்சி மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளை வரவழைத்த அவர், 'பக்தர்கள் செல்லும் பாதையை இப்படித்தான் வைத்திருப்பீர்களா?' எனச் சாடினார். உடனடியாக போர்க்கால அடிப்படையில் இந்த இடத்தைச் சுத்தம் செய்து தர வேண்டும் என அதிரடி உத்தரவு பிறப்பித்தார்."மேலும் செய்தியாளர் சந்திப்பில் பழனி சட்டமன்ற அலுவலகத்தில் நான் 24 மணி நேரமும் மக்களுக்காகக் காத்திருப்பேன். உங்கள் குறைகளை எப்போது வேண்டுமானாலும் என்னிடம் நேரடியாகச் சொல்லலாம். பழனியைச் சுற்றியுள்ள பகுதிகளில் இனி குப்பைகளை வீச வேண்டாம் எனப் பொதுமக்களையும் கைகூப்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன். எனது முழு கவனமும் இனி பழனி மக்களின் முன்னேற்றத்தில் தான் இருக்கும்."தொகுதியின் அடிப்படைப் பிரச்சனைகள் ஒவ்வொன்றாகச் சரி செய்யப்படும் என அவர் உறுதி அளித்திருப்பது பழனி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161